සියලු හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION - NORTH CENTRAL PROVINCE

තෙවන වාර පරීක්ෂණය - 2024
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
THIRD TERM EXAMINATION - 2024

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
ISLAM I, II

ශ්‍රේණිය 11
தரம் 11
GRADE 11

පැය තුනයි විනාඩි දහයයි
மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்
THREE HOURS & TEN MINUTES

# புள்ளித் திட்டம்

## இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 2 | **11** | 4 | **21** | 2 | **31** | 3 |
| **02** | 4 | **12** | 1 | **22** | 3 | **32** | 1 |
| **03** | 1 | **13** | 3 | **23** | 3 | **33** | 3 |
| **04** | 2 | **14** | 3 | **24** | 2 | **34** | 1 |
| **05** | 1 | **15** | 4 | **25** | 1 | **35** | 2 |
| **06** | 3 | **16** | 1 | **26** | 4 | **36** | 2 |
| **07** | 3 | **17** | 1 | **27** | 4 | **37** | 1 |
| **08** | 4 | **18** | 2 | **28** | 3 | **38** | 4 |
| **09** | 2 | **19** | 2 | **29** | 1 | **39** | 3 |
| **10** | 1 | **20** | 3 | **30** | 2 | **40** | 4 |

## இஸ்லாம் II

**(01)**

1) அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது, சூனியம் செய்வது, (சட்டபூர்வமான) உரிமையின்றி கொல்லக் கூடாது என்று அல்லாஹ் தடை விதித்துள்ள உயிரைக் கொல்வது, அநாதைகளின் செல்வத்தை உண்பது, வட்டியை உண்பது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, அப்பாவிகளான, இறை நம்பிக்கை கொண்ட, கற்புள்ள பெண்கள்மீது அவதூறு கூறுவது *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

2) இஸ்லாத்திலிருந்து தூரமாக்கப்படுவார், மன நிம்மதியை இழப்பார், பாவச் செயல்களில் வீழ்ந்துவிடுவார், மறுமையில் ஸகர் எனும் நரகில் நுழைவார். *(வேறு பொருத்தமான இரு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)*

3) ஜனாஸா தொழுகை தொழுதல், ஜனாஸாவை குளிப்பாட்டுதல், கபனிடுதல், அடக்கம்செய்தல், ஊருக்கு ஒரு மார்க்க அறிஞரை உருவாக்குதல், ஊருக்கு ஒரு வைத்தியரை உருவாக்குதல். *(போன்ற பொருத்தமான ஏதேனும் இரண்டு விடைகள்)*

4) முஸ்லிம் நேசன், ஞான தீபம், அசன்பே சரித்திரம் *(ஏதேனும் இரண்டு)*

5) தங்கம் - 85 கிராம் அல்லது 20 மிஸ்கால்
வெள்ளி - 595 கிராம் அல்லது 200 திர்கங்கள்

6) அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் பற்றிப்பிடித்தல், தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுதல், கூட்டுக் கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், தனி நபர்களுக்கான கருத்துச் சுதந்திரம், பொது விவகாரங்களில் கருத்து வேறுபாடு வரும்போது ஏகோபித்த முடிவை ஏற்றல், முஸ்லிம்கள் ஒன்றுபட்டு இயங்குதல், சான்று பகர்தலும் முன்மாதிரியாக நடத்தலும் . சகோதரத்துவத்தைப் பேணி நடத்தல், சமத்துவம் பேணல் *(போன்ற பொருத்தமான இரு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

7) திருமணம், வியாபாரம்

8) சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல், சமூகத்தில் ஒற்றுமை குலையாதிருத்தல், பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைத்தல் (இவற்றுள் ஏதேனும் இரண்டு)

9) மிம்பர், ஒட்டகையின் முதுகு, ஸபா மலைக்குன்று *(போன்ற பொருத்தமான இரு விடைகள்)*

10) பாவமன்னிப்புக் கோரல் - தௌபா
பற்றற்ற வாழ்வு - ஸுஹ்த்

**(02)**

i. இல்ஹாத் நாத்திகம் எனப்படும் இறைவன் இல்லை என நிராகரிப்பது நாத்திகம் ஆகும்.
குப்ர் மறைத்தல், மூடுதல் என்ற கருத்துக்களைத் தரும்.இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் திட்டவட்டமாக அறியப்பட்ட அதன் செயல் முறைகளையும் நிராகரிப்பது குப்ர் எனப்படும்.

ii. இஸ்லாமிய வரலாற்றில் பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்குள் உருவான அரசியல் உட்பூசல்கள், அன்னியர்களின் சிந்தனை தாக்கம், ஏனைய சமயங்களுடன் ஏற்பட்ட உறவுகள் மற்றும் தொடர்புகள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகிக்கும் நிலை ஏற்பட்டமை, மார்க்கத்தில் தீவிர போக்கை கடைப்பிடித்தமை, மனோ இச்சைகளைப் பின்பற்றியமை, எதிரிகளின் திட்டமிட்ட சதி, மூட நம்பிக்கைகளை மக்கள் பின்பற்றியமை. *(ஏதேனும் மூன்று)*

iii. உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை அறிந்துகொள்ளவும் அவற்றைப் பேணி வரவும் இறைவழிகாட்டல் (ரிஸாலத்) அவசியமாகின்றமை.
மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் மிகச் சரியாக உணர்த்தப்படுவதற்கு ரிஸாலத் அவசியமாகின்றமை.
இறைவனின் போதனைகளை நடைமுறை படுத்திக் காட்டுவதற்கு ஒரு சிறந்த முன்மாதிரி தேவை என்ற வகையில் ரிஸாலத் அவசியம்.
மனித அறிவினால் அறிந்து கொள்ள முடியாத பல விடயங்களை அறிந்து கொள்வதற்கு ரிஸாலத் அவசியம்.
*(இவற்றுள் ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள். அவை சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் இன்னும் 2 புள்ளிகள்)*

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. போதிய வருமானம் உள்ளவர், அடிமைகள், நபி (ஸல்) அவர்களது வம்சத்தைச் சார்ந்தவர்கள், ஸகாத் கொடுப்பவரால் தாபரிக்க கடமைப்பட்டவர்கள், முஸ்லிம் அல்லாதவர்கள்
*(இவற்றுள் இரண்டு குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

ii. சுவன வாயில்கள் திறக்கப்படுகின்றன. சுவனம் அலங்கரிக்கப்படுகிறது. நரக வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. மலக்குகள் நோன்பாளிக்காக பாவமன்னிப்பு கோறுகின்றனர். நோன்பாளிகள் துஆ அங்கீகரிக்கப்படுகின்றது. ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவு ரமலான் மாதத்தில் உள்ளது. நரக விடுதலை கிட்டுகிறது.
*(இவற்றுள் மூன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. ஹஜ் கடமையை உரிய முறையில் நிறைவேற்றுவர் அன்று பிறந்த பாலகர்கள் போன்று பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக மாறுவர்.
ஹஜ்ஜின் மூலம் ஒரு அடியான் இறைவன் முன்னிலையில் தனது அடிமைத்துவத்தை வெளிப்படுத்துவது, நன்மையான காரியங்களில் நேரத்தை செலவிடுவதற்கும் இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பத்தைப் பெறுகிறான்.
ஹஜ் கடமை மூலம் சகோதர முஸ்லிம்களுடனான சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை மேலும் விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, கூட்டு வாழ்வு, மறுமை உணர்வு போன்றவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

*(போன்ற ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள். அவை சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் இன்னும் 2 புள்ளிகள்)*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஒரு இலட்சம் தொழுகைக்கு சமமானதாகும். எனது இப்பள்ளியில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஆயிரம் தொழுகைக்குச் சமனாகும். மஸ்துல் அக்ஸாவில் நிறைவேற்றப்படும் தொழுகை ஐந்நூறு தொகைக்குச் சமனாகும். (புகாரி)
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “மூன்று புனிதஸ்தலங்களுக்கு மாத்திரமே புனித யாத்திரை மேற்கொள்ள முடியும். என்னுடையப் பள்ளி, மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா” (புகாரி)
*(இவற்றுள் ஒரு ஹதீஸ் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

ii. மக்களின் அதிருப்தியை பெற்ற கவர்னர்களை பதவி நீக்கம் செய்தமை.
அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும் வரை உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை தொடர்பில் விசாரணை நடத்தாமை.
கூ:.பா நகரம் அபிவிருத்தி செய்யப்பட்டமை.
நகரமயமாக்கல், கலாசார மேம்பாடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை.
பொலீஸ் திணைக்களம் மறுசீரமைப்பு செய்யப்பட்டமை
நீதிவிசாரணைக்கான தனி இடங்கள் ஏற்படுத்தப்பட்டமை
கால் நடைகளுக்கான தொழுவங்கள் உருவாக்கப்பட்டமை.
சிறைச்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டமை.
அரபு இலக்கணம் பிக்குக் கலை கற்பதற்கான கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டமை.
அல்குர்ஆனின் எழுத்துக்களுக்கு உயிர்குறி இடப்பட்டமை.

*(இவற்றுள் ஏதேனும் மூன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. இலங்கையிலுள்ள மாணிக்க கற்கள், யானைத் தந்தம், வாசனை திரவியங்கள் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு கொண்டு சென்று இலங்கைக்கான சர்வதேச சந்தையை பெற்றுக் கொடுத்தமை.
ஆதம் (அலை) அவர்களின் கால் பாதம் பதிந்த மலை இலங்கையில் இருப்பதாக அரேபியரிடையே பரவலடையச் செய்ததன் மூலம் சுற்றுலாத் துறை வளர்வதற்கு உதவியமை.
இலங்கையின் ஏற்றுமதி பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணியை ஈட்டிக் கொடுத்தமை.
விவசாய மேம்பாட்டுக்காக முஸ்லிம்களும் விவசாயத்தில் ஈடுபட்டமை.

வெளிநாடுகளிலிருந்து நெசவு தொழிலாளர்களை அழைத்து வந்து அதனை உள்நாட்டில் உள்ளவர்களுக்கும் கற்றுக் கொடுத்தமை.
தவளம் என்னும் போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்தியமை.
மன்னர்களுக்கு வணிக ஆலோசகர்களாக செய்யப்பட்டு பொருளாதாரத்தை விருத்தி செய்தமை.
மன்னர்களுக்குத் தேவையான படையுதவியை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொடுத்தமை.
காலனித்துவ இலங்கையில் நீதி, நிர்வாகத் துறைகளில் செயலாற்றியமை.
பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்து இலங்கையின் சுதந்திரத்துக்காக பாடுபட்டமை.

*(போன்ற பொருத்தமான ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5x2 – 10)*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. இஜ்திஹாத் என்ற சொல் ''முயற்சித்தல்'' எனும் கருத்துக்கொண்ட 'ஜஹத' என்ற மூலச் சொல்லிலிருந்து பிறந்ததாகவும். புதிய பிரச்சனை ஒன்று தோன்றி அதற்கான தீர்வை அல்குர்ஆனோ சுன்னாவோ நேரடியாக வழங்கி இருக்காத போது அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் ஆழமான அறிவு உள்ளவர்கள் இரண்டையும் அடிப்படையாக வைத்து தீர்வினை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்கின்ற ஆய்வு முயற்சியே இஜ்திஹாத் எனப்படும்.

ii. பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல ஒட்சிசனை நடத்தி குறைந்த குறைந்து செல்கின்றமை.
சிசு உருவாக்கத்தினைப் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகினறமை.
தேனியில் மருத்துவ குணம் உண்டு என்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றமை.
கடல்களுக்கு இடையில் கண்களுக்குப் புலப்படாத தடுப்புச்சுவர் இருப்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றமை.
*(இவை போன்ற பொருத்தமான ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபாக்கள் ஹதீஸ்களை மனனம் செய்தும் ஒரு சிலர் எழுதியும் பாதுகாத்து வந்தனர். நபி (ஸல்) அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து அவற்றை அடுத்த தலைமுறையினரான தாபியீன்களுக்கும் எத்தி வைத்தனர். தாபியீன்களும் செவி வழியாக ஹதீஸ்களை கற்றுக் கொண்டு புறநடையாக எழுத்து வடிவிலும் பதிந்தும் கற்பித்தும் வந்தனர்.

குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தில் அல்குர்ஆனை தொகுக்கும் பணி இடம்பெற்றதுனால் ஹதீஸ்களை தொகுக்கும் பணி கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலத்திலேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அக்காலத்தில் ஹதீஸ்களை ஒன்று திரட்டும் பணி முழுமையாக நிறைவு பெறாததால் ஹதீஸ்களுள் போலியான ஹதீஸ்களும் கலக்க ஆரம்பித்தன. இதனால் ஹதீஸ்களின் தரத்தை ஆராய்வதற்கு கலைகளும் தோற்றம் பெற்றன. ஹதீஸ்களை தொகுத்த ஆசிரியர்கள் அதன் தரத்தையும் ஆராய்ந்து ஹதீஸ்களை வகைப்படுத்தி தொகுக்க ஆரம்பித்தனர்.

*(இது போன்ற பொருத்தமான விடை எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள். பார்க்க. பாடநூல் தரம் 11 – பக்கம் 85)*

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. ஸாலிஹான சந்ததியை உருவாக்குதல், உடல், உள அமைதியை ஏற்படுத்துதல், சிறந்த சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவித்தல்.
*(இவற்றுள் இரண்டு குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

ii. பார்வையைத் தாழ்த்துதல், பெண்கள் அவ்ரத்தை முழுமையாக மறைக்கக்கூடிய வகையிலும் மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிகலன்களை அணிதல். நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களை பேணிக்கொள்ளல். ஆண்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களிலிருந்தும் விலகி இருத்தல். ஆண் பெண் தனித்து இருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தல். சமூக நலனையும் தேவையினை கருத்திற்கொண்டு இருசாராரும் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

*(இவை போன்ற பொருத்தமான ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. விவாக விலக்கின் பிரதான பிரிவுகளான தலாக், பஸ்கு, குல்உ ஆகியவை குறிப்பிடப்பட்டு அவை சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*(பாடநூல் தரம் 11 - பக்கம் 157,158ல் குறிப்பிடப்பட விடையங்களை மையப்படுத்தி விடை எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 63,64ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 126-129ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 92ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 133-135ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)

**தாயாரிப்பு:**

அஷ்ஷேக் ஏ.எஸ்.எம். ஹபீழ் (மதனி)

மௌலவி ஆசிரியர் - அ/அல்மாஸ் மகா வித்தியாலயம்